பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

20 09 2024 **FRIDAY** **6.30 PM**

<u>மாநில செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. விஸ்வகர்மா திட்டத்தை பயன்படுத்தி கைவினைக்கலைஞர்கள் தொழில் முனைவோர்களாக உருவாக வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மூத்த குடிமக்களுக்கான மருத்துவக்காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் ஆறு கோடி பேர் பயனடைவார்கள் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் நிபா வைரஸ் பாதிப்பு இதுவரை உறுதி செய்யப்படவில்லை என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

4. கோவை மாவட்ட மலையடிவார கிராமங்களில் சட்ட விரோதமாக மண் எடுக்கும் பணிகளை உடனடியாக தடுத்துநிறுத்த வேண்டும் என்று தமிழக அரசுக்கு, சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

5. பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.

---- இனி விரிவான செய்திகள் ----

<<<<<<>>>>>

மத்திய அரசின் விஸ்வகர்மா திட்டத்தை பயன்படுத்தி கைவினைக்கலைஞர்கள் தொழில் முனைவோர்களாக உருவாக வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த திட்டம் ஓராண்டை பூர்த்தி செய்து, இரண்டாவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளதையடுத்து, மகாராஷ்ட்ராவின் **Wardha**–வில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

*<u>(சவுண்ட் பைட் - மோடி (1) – 52 செகண்ட்ஸ்)</u>*

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இலக்குகளை எட்ட இந்த திட்டம் வலுசேர்க்கும் என்றும் திரு நரேந்திர மோடி கூறினார்.

*(சவுண்ட் பைட் - மோடி (2) – 31 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

பிரதமராக திரு நரேந்திர மோடி மூன்றாவது முறையாக பொறுப்பேற்ற முதல் 100 நாட்களில் வரலாற்று சிறப்புமிக்க முடிவுகளை மேற்கொண்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 70 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்குமான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் ஆறு கோடி பேர் பயனடைவார்கள் என்றார்.

இத்திட்டத்தின்கீழ் ஐந்து லட்சம் ரூபாய் வரை இலவச சிகிச்சை கிடைக்கும் என்றும் அவர் கூறினார்.

சுகாதாரத்துறையின் வளர்ச்சிக்காக கடந்த 100 நாட்களில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களையும் அவர் பட்டியலிட்டார்.

திருப்பதி லட்டு விவகாரம் குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், இதுதொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆந்திரப்பிரதேச அரசிடம் கோரப்பட்டுள்ளதாக கூறினார்.

அந்த அறிக்கையை ஆய்வு செய்த பின்னர் மத்திய அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும் என்றும் திரு ஜெ பி நட்டா தெரிவித்தார்.

இதற்கிடையே, திருப்பதி லட்டு பிரசாதத்தில் விலங்கு கொழுப்பு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் புகார் குறித்து விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று மத்திய உணவு அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், புகார்கள் உறுதி செய்யப்பட்டால் சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்றார்.

இந்நிலையில், உணவு பதப்படுத்துதல் துறை அமைச்சர் திரு சிராக் பஸ்வானும், இந்த பிரச்சினையில் தவறு செய்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் நிபா வைரஸ் பாதிப்பு இதுவரை உறுதி செய்யப்படவில்லை என்று பொது சுகாதாரத்துறை இயக்குனர் டாக்டர் செல்வ விநாயகம் கூறியுள்ளார்.

இன்று கன்னியாகுமரி மாவட்டம் களியக்காவிளை சோதனைச்சாவடியில் இதுதொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

*(சவுண்ட் பைட் - செல்வவிநாயகம் (1) - 38 செகண்ட்ஸ்)*

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் திரு செல்வவிநாயகம் கூறினார்.

**<<<<<<>>>>>**

கோவை மாவட்ட மலையடிவார கிராமங்களில் சட்ட விரோதமாக மண் எடுக்கும் பணிகளை உடனடியாக தடுத்துநிறுத்த வேண்டும் என்று தமிழக அரசுக்கு, சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான மனுவை விசாரணை செய்த நீதிபதிகள் திரு சதீஷ்குமார், திரு பரதசக்ரவர்தி அமர்வு இன்று இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

சட்டவிரோதமாக மண் எடுப்பவர்களை கைது செய்ய வேண்டும் என்றும், இயந்திரங்கள் பறிமுதல் செய்யப்பட வேண்டும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வித கட்டுப்பாடும் இல்லாமல் செம்மண் எடுக்கப்படுவது காணொளி வாயிலாக உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், இதனை அனுமதித்தால் மேற்கு தொடர்ச்சி மலையே காணாமல் போய்விடும் என்றும் நிலச்சரிவு அபாயங்கள் ஏற்படும் என்றும் நீதிபதிகள் எச்சரித்தனர்.

**<<<<<<>>>>>**

கடல் பகுதிகள் தூய்மையாக பராமரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை கடலோர காவல்படையின் ஐ ஜி திரு **Donny Michael** வலியுறுத்தியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சர்வதேச கடற்கரை தூய்மை தினம் நாளை கொண்டாடப்படுவதையொட்டி, பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக கூறினார்.

*(சவுண்ட் பைட் - **Donny Micheal –** 53 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

வேலூர் மாவட்டம் காட்பாடியில் வீட்டுவசதித்துறை சார்பில் வணிக பயன்பாட்டிற்காக கட்டப்பட்டுள்ள புதிய கடைகளை மாநில அமைச்சர் திரு துரைமுருகன் இன்று திறந்துவைத்தார்.

---------------

கன்னியாகுமரி மாவட்டம் தடிக்காரன்கோணம் ஊராட்சிக்கு உட்பட்ட பகுதியில் ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித்திட்டப்பணிகளை மாநில அமைச்சர் திரு மனோ தங்கராஜ் இன்று தொடங்கிவைத்தார்.

--------------------

திண்டுக்கல் மாவட்டம் மருதாநதி நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்திற்காக தண்ணீரை மாநில அமைச்சர் திரு ஐ. பெரியசாமி இன்று திறந்துவிட்டார்.

----------

அரியலூர் மாவட்டத்தில் ஊட்டச்சத்து குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டிருந்த சிறுதானிய உணவு அரங்கை ஆட்சியர் திரு ரத்னசாமி பார்வையிட்டார்.

--------------------

காஞ்சிபுரம் காமாட்சி கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில், தீபாவளி சிறப்பு விற்பனையை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று தொடங்கிவைத்தார்.

--------

நாமக்கல் மாவட்டம் மோகனூரில் தூய்மையே சேவை இயக்கத்தின் ஒரு பகுதியாக சுகாதார விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.

சென்னையில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் இரண்டாம் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் இந்தியா இரண்டாவது இன்னிங்சில் மூன்று விக்கெட் இழப்பிற்கு 81 ரன் எடுத்துள்ளது.

சுப்மன் கில் 33 ரன்னுடனும், ரிஷப் பன்ட் 12 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

முன்னதாக, பங்களாதேஷ் முதல் இன்னிங்சில் 149 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக **Shakib Al Hasan** 32 ரன் எடுத்தார்.

எஞ்சியவர்கள் சொற்ப ரன்னுக்கு ஆட்டமிழந்தனர்.

பும்ரா அபாரமாக பந்துவீசி நான்கு விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

ஜடேஜா, சிராஜ் மற்றும் **Akash Deep** தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

-----------------

காமன்வெல்த் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியா 23 தங்கம், 12 வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

ஃபிஜுயில் நடைபெற்ற இப்போட்டியில் **Parv Choudhary** இளையோர் பிரிவிலும், ஜூனியர் பிரிவிலும் தங்கப்பதக்கங்களை வென்றார்.

ஓவியா இளையோர் பிரிவில் தங்கப்பதக்கத்தையும், ஜூனியர் பிரிவில் வெண்கலப்பதக்கத்தையும் வென்றார்.

----------

உலக கோப்பை **Taekwondo** போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

ஆடவர் 58 கிலோ பாரா பிரிவில் மோகி சிங் வெள்ளிப்பதக்கத்தையும், மகளிர் 46 கிலோ எடைப்பிரிவில் சோனியா பரத்வாஜ் வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

<<<<<<END>>>>>